முருகப்பெருமான் துணை

**மகான் செருத்துணை நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.10.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. பஞ்சமா பாதகங்களை எல்லாம்
பறந்தோடச் செய்து விரட்டி
தஞ்சமனே தயாபரனாக மக்களுக்கு
தனிப்பெருங்கருணை காட்டி அருளும்
2. அருளும் அரங்கமகா ஞானியே
அண்ணலே உன் பெருமை கூறி
அருளுவேன் அறிவுரை ஆசி
ஆற்றல்பட சோபகிருது துலை திங்கள்
3. திங்களிலே பஞ்சதிகதி கதிர் வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 05 ம் நாள், 22.10.2023, ஞாயிற்றுக்கிழமை)
தேசிகன் கேட்க செருத்துணை நாயனாரும்
ஓங்கார ஞானலோகம் அமைய உரைப்பேன்
ஓங்கார நாதம் உலகமெல்லாம் முழங்க
4. முழங்கவே உலகை மிரட்டுகின்ற
மும்மலக் குற்றக் கேடுகள்
புழங்கா விலகிப் பாதுகாப்பாய்
புண்ணிய வழிகளாக மாறி
5. மாறியே அரங்க ஞானி காட்டும்
மாதரும சேவை களாகத் தேறி
தேறிடும் தரும நீதி பழக்கமாக
தெய்வநெறி பின்பற்றும் மக்களாக
6. ஆகவே எங்கும் மாற்றம்
அரங்கனால் தருமத்தால்
வகைபட எல்லா தேசத்திலும்
வளர்ச்சி நிலையாகக் கண்டு

7. கண்டுமே மாற்றம் கூடும்
கலிபகவான் அஞ்சும்படி
தொண்டுத் தியாக நிலை பெருகி
தொடருகின்ற அஞ்ஞானம் அகன்று

8. அகன்று சற்குரு அருளும்
ஆசியும் பெற்ற மக்களாக
செகம் வெல்லும் ஞானவான்களாக
சித்திநிலையும் கண்டு சிறந்து

9. சிறந்துமே மாண்புள்ளவர்களாக
சித்தர்களாகவேத் தேறி
பரந்த பேருலகம் ஞான ஆட்சி
பண்பானவர்களால் நடந்தேறும்

10. நடந்தேற கலிவாழ் மக்கள்
நம்பிக்கை வைத்து அரங்கன்வழி
தடைகளின்றி தொடர வேணும்
தன்னார்வத் தொண்டு நிரம்பி

11. நிரம்பியே நல்லுலகம் தானாக
நிலவுலகம் அற்புதம் காணும்
அருந்தவசி அரங்கனால் நிறைவேறும்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—